පරිපාලන කටයුතු පිළිබඳ පාලර්මේන්තු කොමසාරිස් (ඔම්බුඩ්ස්මන්) කාර්යාලය
நிருவாகத்துக்கான பாராளுமன்றஆணையாளர் அலுவலகம் (ஓம்புட்ஸ்மன்)
**OFFICE OF THE PARLIAMENTARY COMMISSIONER FOR ADMINISTRATION**
**(Ombudsman)**

පළමු මහල, අංක:14, ආර්.ඒ.ද මෙල් මාවත, කොළඹ 04.
முதலாவது மாடி, இல -14 ஆர்.ஏ.டி மெல் மாவத்தை, கொழும்பு – 04.
First Floor, No: 14 R.A.De Mel Mawatha, Colombo 04, Sri Lanka.

කොමසාරිස් ஆணையாளர் 011-2588982 Commissioner
පරිපාලන නිලධාරී நிருவாக உத்தியாகத்தர் 011-2585896 Administrative Officer
කාර්යාලය அலுவலகம் 011-2588798 Office
ෆැක්ස් பக்ஸ் 011-2501126 Fax
E-mail: ombudssl@sltnet.lk

මගේ අංකය: எனதுஇல: My No:
ඔබේ අංකය: உமது இல: Your No:
දිනය: திகதி: Date

**நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளரின் செய்தி**

நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளரின் அலுவலகம் இணையத்தளத்தை ஆரம்பித்துள்ளதால் இந்நிகழ்வில் சில கருத்துக்களை முன்வைப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். இந்நிறுவனம் வரையறுக்கப்பட்ட வளங்களை கொண்டு கடந்த முப்பத்தைந்து வருடங்களாக மதிப்புமிக்க சேவையை வழங்கி வருகிறது. மிகையான வளப்பற்றாக்குறையின் கீழ் இப்பொறுப்புக்களை நடாத்தி செல்கிறது. இணையத்தள அங்குராப்பணமானது எமது வரலாற்றில் மிகச்சிறந்த நடவடிக்கையாக மட்டுமல்லாது பிரசைகள் மிகவும் சுலபமாக இந்நிறுவனத்தை அணுக ஏதுவாக உள்ளது.

நவீன சமுதாயத்தின் அடிப்படை தேவையொன்றாக நல்லாட்சி முறை அமைகிறது. பொதுமக்களின் மிகச் சிறந்த நலன்களை முழு அளவில் கருத்தில் கொண்டு பாரிய அதிகாரங்களுடன் நிர்வாகத்தின் வழமையான காரியங்களை கொண்டு நடாத்துவதற்குப் பொறுப்பாக அரசாங்கப் பொறிமுறைகள் கையளிக்கப்படுகின்றன. இவ்வாறு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களானது சட்டங்கள் ஒழுங்குகள் இயற்கை நீதி மற்றும் சமத்துவம் என்பவை மீறப்படும் போது பிரயோகிக்கப்படுபவை என கருதப்படுதலாகாது. வழமையான நிர்வாக நடவடிக்கையின் போது நிர்வாக துஷ்பிரயோகம் ஆளொருவருக்கு இழைக்கப்படுமாயின் அவ் அநீதியை கண்டறிவதற்கும் விசாரணை செய்வதற்கும் தவற்றைச் சீர்படுத்துவதற்கும் திருத்தியமைப்பதற்குமே ஒம்புட்ஸ்மன் அலுவலகம் தாபிக்கப்பட்டுள்ளது

மிகவும் சக்திவாய்ந்த செருக்கு கொண்ட தன்னாதிக்க அலுவலகங்கள் மற்றும் பிரசைகளை வெறுப்பூட்டும் தொந்தரவு மிக்க செயற்பாடுகள் மற்றும் அரசாங்கத்தின் நிர்வாக கிளையில் உள்ள தன்னாதிக்க இயல்புகளை ஒம்புட்ஸ்மன் ஈடுசெய்கிறார். நிர்வாக அதிகாரியொருவர் திறமைக்கு அப்பால் அவர் எச்சூழ்நிலைகளிலும் அவர் எதிர்க்கப்படினும் மனிததன்மையுடனான அணுகு முறையொன்று மூலம் அணுகுவது அவசியமாகும். நிர்வாக அதிகாரியொருவர் ஆர்வத்துடன் சேவை செய்யவேண்டும். அவையின்றி பயிற்றப்பட்ட சிறந்த நிர்வாகியொருவரால் பிரச்சனையை சரியாக அணுக முடியாதிருக்கும். இத்தகைய நிலைகளில் பிரசைகள் அதற்கான நிவாரணங்களைப் பெற்றுக்கொள்ள இந்நிறுவனத்தை அணுகிறார்கள்.

இக்குறிப்பை இத்துடன் நிறைவு செய்கிறேன். இவ் வெற்றிக்கு அர்ப்பணிப்புடன் சேவையாற்றியவர்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

எல்.ஏ.திஸ்ஸ ஏக்கநாயக்க
நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர்.
(ஒம்புட்ஸ்மன்)